AIC/IN/3116/2022

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பணியமைப்பு பிரிவு/ 2022 நாள்: 05.03.2022

## சுற்றறிக்கை

பொருள்: பணியமைப்பு – பல்கலைக்கழக ஆசிரியர் மற்றும் ஊழியர்கள் நேரம் தவறாமல் பணிக்கு வரவும் அலுவலக நடைமுறைகளை கடைப்பிடிக்கவும் அறிவுறுத்தல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள்: 05.03.2022

*****

பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் அலுவலக நடைமுறைகளை பின்பற்றி பணிக்கு வந்து செல்ல பல சுற்றறிக்கைகள் அளிக்கப்பட்டுள்ளது. பணி நேரங்களில் அவரவர் பணியிடங்களில் இல்லாமல் இருப்பது, பணிக்கு குறித்த நேரத்தில் வராமல் இருப்பது, விடுப்பு விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட துறை பிரிவு தலைவர் மூலம் சமர்ப்பிக்காதது போன்ற குறைபாடுகள் இருந்து வருவது நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆகவே, அனைத்து ஆசிரியர்களும், ஊழியர்களும் உரிய நேரத்தில் அலுவலகத்திற்கு / பணியிடத்திற்கு வருவதோடு பணியிடத்தில் போதிய பொறுப்புகளுக்காகவும், பணியில் ஒழுக்கம், பணியிடத்தில் ஒழுக்கம் ஆகியவைகளை தவறாது கடைப்பிடிப்பதோடு, அப்பிரிவில்/துறையில் நிர்வகிக்கப்பட்டு வரும் அலுவலர் நடமாட்ட பதிவேட்டில் (Movement Register) போதிய விவரத்தினை பதிவு செய்யாமல் எக்காரணம் கொண்டும் பணியிடத்தில் இல்லாமல் இருப்பதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

அலுவலக நேரங்களில் அடையாள அட்டை அணிவதை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், விடுப்பு எடுக்கும் காலங்களில் உரிய முன் அனுமதி பெற்று சம்பந்தப்பட்ட துறை / பிரிவு தலைவர் மூலம் மட்டுமே விடுப்பு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றாமல் இருப்பவர்களை பற்றிய அறிக்கை நிர்வாகத்திற்கு கிடைக்க பெறுமானால் சம்பந்தப்பட்டவர்கள் மீது பல்கலைக்கழகத்தின் விதிகளுக்கு உட்பட்டு கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இச்சுற்றறிக்கையின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, இனிவரும் காலங்களில் அனைத்து ஆசிரியர்களும் ஊழியர்களும் நன்முறையில் பணி செய்து பல்கலைக்கழக வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

K. Sheethe 5/3/22

பதிவாளர் (பொ)

5/3/22

பெறுதல்

அனைத்து புல முதல்வர்கள்
அனைத்து துறைத் தலைவர்கள்
தேர்வுத்துறை கட்டுப்பாட்டு அலுவலர்
இயக்குநர், தொலைதூரக் கல்வி இயக்ககம்
ஒருங்கிணைப்பாளர், விடுதி காப்பாளர்கள் குழுமம்
அனைத்து விடுதி காப்பாளர்கள்
நிதி அலுவலர்
அனைத்து உயர் அலுவலர்கள்
அனைத்து பிரிவு அதிகாரிகள்

நகல்

துணைவேந்தரின் நேர்முக உதவியாளர்
பதிவாளரின் நேர்முக உதவியாளர்
இருப்பு கோப்பு

இந்த சுற்றறிக்கையினை அனைத்து ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கு தவறாமல் சுற்றுக்கு விடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.